RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-343 | 09 டிசம்பர் | திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழக மீனவர்கள் 8 பேர் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிப்பு

ராமேசுவரம், டிச.9

தமிழக மீனவர்கள் 8 பேரை நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.



ராமேசுவரம் அருகே மண்டபம் வடக்கு மீன்பிடி துறைமுகத்திலிருந்து சனிக்கிழமை 324 விசைப்படகுகள் அனுமதி டோக்கன் பெற்று சுமார் 1,600 மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். இதில் கார்த்திக் ராஜா, சகாய ஆண்ட்ரிஸ் ஆகியோருக்குச் சொந்தமான இரண்டு விசைப்படகுகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நெடுந்தீவு அருக இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் சிறைப்பிடிக்கப்பட்டது.

படகுகளிலிருந்த கண்ணன், காளி, முத்துராஜ், பத்ரப்பன், யாசின், சேசு, ராமகிருஷ்ணன், வேலு ஆகிய 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையிலுள்ள இலங்கை கடற்படை முகாமிற்கு கொண்டுச் செல்லப்பட்டனர். 8 மீனவர்களும் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்படுவார்கள் என தெரிகிறது. மேலும், கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை 69 தமிழக மீனவர்களின் படகுகளை சிறைப்பிடித்து 537 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாஜகவில் யாரும் ஜாமீனில் வந்து அமைச்சர் ஆகவில்லையா? செந்தில் பாலாஜி கேள்வி

கரூர், டிச.9

பாஜகவில் யாரும் ஜாமீனில் வந்து அமைச்சர் ஆகவில்லையா? என்று மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கேள்வி எழுப்பியுள்ளார்.




கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டப் பேரவைத் தொகுதி பொதுமக்களை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சந்தித்து மனுக்கள் பெறும் நிகழ்ச்சி இன்று (டிச.08) நடைபெற்றது. கரூர் மாநகராட்சி 47வது வார்டு கோடங்கிப்பட்டி பட்டாளம்மன் கோயில் அருகில் மனுக்கள் பெறும் நிகழ்ச்சி தொடங்கி நடைபெற்றது. ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். காவல் கண்காணிப்பாளர் கே.பெரோஸ் கான் அப்துல்லா, எம்எல்ஏக்கள் ரா.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செந்தில் பாலாஜி "துணைமேயர் ப.சரவணன் இப்பகுதிக்கு செய்த பணிகளை தெரிவித்தார். கடந்த 2006ம் ஆண்டு முதல் அனைத்து நிகழ்ச்சிகளும் இங்கு தான் தொடங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் கரூர் மாநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகளில் ரூ.476 கோடியில் புதைசாக்கடை பணிகள், ரூ.113 கோடியில் புதிய காவிரி குடிநீர் திட்டம் என ஏராளமான திட்டங்களை முதல்வர் வழங்கி வருகிறார். நிறைய திட்டங்கள் கொண்டு வரப்படும்" என்றார். மேலும் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார்.

முன்னதாக அங்குள்ள பட்டாளம்மன் கோயிலில் அமைச்சர் செந்தில் பாலாஜி வழிபாடு செய்தார். கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், கரூர் கோட்டாட்சியர் முகமதுபைசல், கரூர் மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், சக்திவேல், கரூர் வட்டாட்சியர் குமரேசன், கரூர் டிஎஸ்பி செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அவர், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்: "தமிழக முதல்வர், எந்த காலத்திலும் குறிப்பாக மின்வாரியம் சம்பந்தமாக அதானியை சந்திக்கவில்லை என ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதற்கு பிறகும் அந்த அறிக்கை குறித்து கருத்துக்கள் முன் வைக்கப்படுகிறது. ஒன்று ஒரு முறை படித்து தெரிந்திருக்கலாம். படித்து புரியவில்லை என்றால் பலமுறை படித்து யோசித்திருக்கலாம். புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் தெரிந்தவர்களிடம் விளக்கத்தை கேட்டு, சரி பண்ணி கொள்ளலாம். படித்தும் புரியவில்லை, தெரிந்தவர்களிடம் கேட்டும் புரிந்து கொள்ள பக்குவமும் இல்லை. அந்தளவுக்கு அறிவுத்திறனும் இல்லை.

ஒரு கருத்தை பேசும் போது, மாற்றுக் கருத்தை முன் வைக்கிறோம். இந்த 3 ஆண்டுகளில் அதானி நிறுவனத்துடன் எந்தவிதமான வர்த்தக தொடர்புகள் இல்லை என தெளிவாக கூறியுள்ளோம். பாஜகவில் யாரும் ஜாமீனில் வந்து அமைச்சராகவில்லையா? அவர்கள் சொல்லக்கூடிய குற்றசாட்டு என்பது ரூ.7.01 மின்சாரம் வாங்கியது. இது கடந்த ஆட்சியில் போடப்பட்ட மின் ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட நிதி என்பது உச்சநீதிமன்றம் வரை சென்று வழக்கு நிலுவையில் உள்ளது. நாங்கள் தடையாணை கேட்டோம். வழங்கப்படவில்லை. அதனால், அந்த நிதி விடுவிக்கப்பட்டிருக்கிறது.

நாங்கள் ஒப்பந்தம் போட்டதை போல, எங்கள் அரசு ஒப்பந்தம் போட்டதை போல ஒரு தோற்றத்தை மக்கள் மத்தியில் உருவாக்க முயற்சி செய்கின்றனர். அந்த முயற்சி ஒரு போதும் எடுபடாது, அது மக்களுக்கு தெளிவாக தெரியும். தமிழக முதல்வர் வழங்கக்கூடிய சிறப்பு திட்டங்களையும், பொற்கால ஆட்சியையும் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் மீண்டும் வென்று தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள் இது மக்கள் மனதில் வைத்திருக்க கூடிய அன்பு, பாசம். இதுதான் யதார்த்த நிலை.

2026 தேர்தலிலும் திமுக தான் வெற்றி பெறும் என்றார்.

## மீண்டும் 'டெல்லி சலோ' பேரணியைத் தொடங்கிய விவசாயிகள் கண்ணீர் புகை வீசி தடுத்த போலீஸார்

புதுடெல்லி, டிச.9

இரண்டு நாள் இடைநிறுத்தத்துக்கு பின்பு 101 பேர் அடங்கிய விவசாயிகள் குழு ஷம்பு எல்லையில் இருந்து டெல்லி சலோ பேரணியை இன்று (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் தொடங்கினர். பேரணி தொடங்கிச் சென்ற சில மீட்டர் தூரத்திலேயே ஹரியானா போலீஸார் விவசாயிகளைத் தடுத்து நிறுத்தியதால் மோதல் ஏற்பட்டது. விவசாயிகளைக் கலைக்க போலீஸார் மீண்டும் கண்ணீர் புகை குண்டை பயன்படுத்தினர்.



வேளாண் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டபூர்வ உத்திரவாதம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 'டெல்லிக்கு செல்வோம்' போராட்டத்தை பஞ்சாப் விவசாயிகள் தொடங்கியுள்ளனர். சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகள் இதில் பங்கேற்றுள்ளனர். இவர்கள் டிராக்டர்களில் பஞ்சாப் ஹரியானா இடையே அமைந்திருக்கும் ஷம்பு எல்லையில் டிச.5ம் தேதி குவிந்தனர்.

தொடர்ந்து 101 விவசாயிகள் ஜோடியாக ஷம்பு பகுதியில் இருந்து டெல்லி நோக்கி வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு ஜோடி பேரணியாக அணிவகுப்பை தொடங்குவார்கள் என்று விவசாயிகள் அறிவித்திருந்தனர். விவசாயிகளின் டெல்லி சலோ போராட்டத்தை டெல்லி அருகே ஷம்பு எல்லையில் தடுத்து நிறுத்திய போலீஸார், தடுப்புகளை மீறிச் செல்ல முயன்ற விவசாயிகள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதில் 6 விவசாயிகள் காயமடைந்தனர். இதனால் அந்த பேரணி பாதியில் கைவிடப்பட்டது.

இந்நிலையில், இரண்டு நாட்கள் இடைநிறுத்தத்துக்கு பின்பு, டெல்லி சலோ ஜோடி பேரணியை ஞாயிற்றுக்கிழமை விவசாயிகள் மீண்டும் தொடங்கினர். அப்பேரணி தொடங்கிச் சென்ற சில மீட்டர் தொலைவில் ஹரியானா போலீஸார் அதனைத் தடுத்து நிறுத்தினர். இதனால் அங்கு மோதல் ஏற்பட்டது. மோதலைத் தடுக்கும் வகையில் போலீஸார் மீண்டும் கண்ணீர் புகை குண்டுகளை வீசி விவசாயிகளைக் கலைத்தனர்.

விவசாயிகள் தங்களின் போராட்டத்தை தொடர்வதற்கான அனுமதியை காட்டுமாறு ஹரியானா போலீஸார் கேட்டனர். இதனால் ஷம்பு எல்லையில் போலீஸார், விவசாயிகளுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயி ஒருவர் கூறுகையில், "போலீஸார் அடையாள அட்டைகளைக் காட்டுமாறு கேட்கின்றனர். அதேபோல் அவர்கள் எங்களை தொடர்ந்து டெல்லி அனுமதிப்பார்கள் என்ற உத்தரவாதத்தையும் அளிக்க வேண்டும். ஆனால் டெல்லி செல்வதற்கு அனுமதி இல்லை என்று போலீஸார் கூறுகிறார்கள். பிறகு நாங்கள் ஏன் அடையாள அட்டைகளைக் காட்ட வேண்டும். எங்களை டெல்லி நோக்கிச் செல்வதற்கு அனுமதித்தால் நாங்கள் அடையாள அட்டைகளைக் காட்டுவோம்" என்றார்.

இதனிடையே போலீஸார் தரப்பில், விவசாயிகள் அவர்கள் சொன்ன 101 பேராக செல்வதற்கு பதிலாக கும்பலாக செல்வதற்கு முயற்சி செய்கின்றனர். அடையாள அட்டைகள் சரிபார்ப்புக்கு பின்னரே விவசாயிகள் மேலும் செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றனர். அவர்கள் கூறுகையில், "நாங்கள் முதலில் அடையாளங்களை சரிபார்க்க வேண்டும். அதற்கு பின்பே அவர்களை முன்னேறிச்செல்ல அனுமதிக்க முடியும். எங்களிடம் 101 விவசாயிகளின் பெயர் பட்டியல் உள்ளது.

ஆனால் இந்த விவசாயிகள் பட்டியலில் உள்ளவர்கள் இல்லை. அவர்கள் எங்களைத் தங்களின் அடையாள அட்டையை சரிபார்க்க விடமால் கும்பலாக முன்னேறிச் செல்லப்பார்க்கிறார்கள்" என்றனர். விவசாயிகள் இதனை மறுத்துள்ளனர் அப்படி எந்த பட்டியலும் போலீஸாருக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தனர்.

விவசாயிகள் தங்களின் பேரணிப் போராட்டத்தை மீண்டும் தொடங்கியுள்ளதைக் கருத்தில் கொண்டு, பஞ்சாப் ஹரியானா எல்லையில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் எல்லையைக் கடப்பதைத் தடுக்கும் வகையில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் எல்லைப் பகுதியில் 5 பேர்களுக்கு அதிகமானவர்கள் கூடுவதைத் தடுக்கும் வகையில், பிரிவு 163 (முன்பு பிரிவு 144) தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

ஷம்புவைத் தவிர பஞ்சாப் ஹரியானா எல்லையான கனவுரியில் நான்கடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு எல்லைசீல் வைக்கப்பட்டுள்ளது.

## "அவர் ஒரு திறமையான தலைவர்" மம்தாவின் இண்டியா கூட்டணி தலைமை விருப்பத்துக்கு சரத் பவார் ஆதரவு

புதுடெல்லி, டிச.9

எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கு தலைமை ஏற்க தயார் என்ற மேற்குவங்க முதல்வர் மம்தாவின் விருப்பத்துக்கு தேசியவாத காங்கிரஸ் கட்சி (எஸ்பி) தலைவர் சரத் பவார் ஆதரவு தெரிவித்துள்ளார்.



கோலாப்பூரில் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த சரத் பவாரிடம் மம்தாவின் இண்டியா கூட்டணிக்கான தலைமை விருப்பம் பற்றி கேட்கப்பட்டது அதற்கு பதில் அளித்த சரத் பவார், "நாட்டில் உள்ள திறமையான தலைவர்களில் அவரும் ஒருவர். அதனைச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உள்ளது. நாடாளுமன்றத்துக்கு அவர் அனுப்பியிருக்கும் எம்பிக்கள் கடின உழைப்பாளிகள், விழிப்புணர்வு உடையவர்கள்" என்றார்.

முன்னதாக, கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி கூறியதாவது: "நான் இண்டியா கூட்டணியை உருவாக்கினேன். ஆனால், அவர்களால் (எதிர்க்கட்சித் தலைவர்கள்) அதை ஒன்றாக வைத்திருக்க முடியவில்லை. நான் என்ன செய்வது? நான் இண்டியா கூட்டணிக்குத் தலைமை தாங்கவில்லை.

கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் ஒன்றாக இருப்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் என்னைப் பொருட்படுத்துவதே இல்லை, ஆனால் நான் அனைத்து தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுடனும் சிறந்த உறவைப் பேணி வருகிறேன். வாய்ப்பு கிடைத்தால் இண்டியா கூட்டணியின் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்வேன். இண்டியா கூட்டணிக்குத் தலைமையேற்கத் தயார். நான் மேற்கு வங்கத்துக்கு வெளியே செல்ல விரும்பவில்லை, ஆனால் நான் மேற்கு வங்கத்தில் இருந்தே கூட்டணியை இயக்க முடியும்" இவ்வாறு மம்தா தெரிவித்தார்.

பல்வேறு பிராந்திய கட்சிகளின் அதிருப்தி மற்றும் சமீபத்திய ஹரியானா, ஜம்மு காஷ்மீர் மற்றும் மகாராஷ்டிரா பேரவைத் தேர்தல்களில் காங்கிரஸின் தோல்வியால் கூட்டணிக்குள் ஒரு அதிருப்தி பரவியிருக்கும் நிலையில், மம்தா பானர்ஜி இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 24 மணி நேரத்தில் வலுவடைகிறது காற்றழுத்த தாழ்வு பகுதி! தமிழகத்தில் எங்கெல்லாம் கனமழை?

சென்னை, டிச.9

தமிழகத்தில் டிசம்பர் 11,12 ஆம் தேதிகளில் கடலூர், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு கன முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "நேற்று தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று (டிச.08) அதே பகுதியில் நிலவுகிறது. இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து சற்று வலுவடையக்கூடும். மேலும் இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து 11 ஆம் தேதி வாக்கில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் இலங்கை தமிழகம் கடலோரப் பகுதிகளையொட்டி நிலவக்கூடும்.

இன்று மற்றும் நாளை (டிச. 8,9) ஆம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். (டிச., 10) ஆம் தேதி கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

(டிச. 11) ஆம் தேதி கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளில் கன முதல் மிக கனமழையும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம். கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர். புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவையில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

(டிச. 12) ஆம் தேதி தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னதுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், புதுவையில் கன முதல் மிக கனமழையும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி, அரியலூர். பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை. நாகப்பட்டினம், புதுக்கோட்டை சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

(டிச., 13) ஆம் தேதி தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் காரைக்கால் பகுதிகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. (டிச., 14) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: தமிழக கடலோரப்பகுதிகளில் டிசம்பர் 8 முதல் 11 ஆம் தேதி வரை எச்சரிக்கை ஏதுமில்லை. (டிச., 12) ஆம் தேதி தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் ஆழ்கடல் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வங்கக்கடல் பகுதிகளில் டிச., (8) ஆம் தேதி தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். டிச., (9) ஆம் தேதி தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். டிச., (10) ஆம் தேதி தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு மற்றும் மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

# வேலூரில் விளையாட்டு உபகரண வாகனத்தை கொடியசைத்து வழி அனுப்பி வைத்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்




வேலூர் டிச.09

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, பூஞ்சோலை ஊராட்சிக்குட்பட்ட வேலூர் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின்

நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற விழாவில் 247 ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு பொருட்கள் அடங்கிய 345 கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனங்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற

உறுப்பினர்கள் முனைவர் ஜெகத்ரட்சகன், கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு, ஈஸ்வரப்பன், வில்வநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் மாநகராட்சி மேயர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, துணை மேயர் மா.சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் என பலர் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் - நலத்திட்ட வழங்கும் விழா







தாம்பரம் டிச.9

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட வழங்கும் விழா கிழக்கு தாம்பரம் வால்மீகி தெருவில் பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் தலைமையிலும் பகுதி அவை தலைவர் வீ.முனுசாமி வரவேற்புயிலும் வே.இராசேந்திரன், பி.ஜோதிகுமார், எம்.சீனிவாசகுமார், எல்.பேகம், டி.ஆர்.நரசிம்மன், எ.நசீர், அ.லோகேஷ்குமார், விஜி.சிவகுமார், சீ.இளஞ்செழியன், கே.ரமேஷ்பாபு, வ.லோகநாதன், கே.டிவி. முருகன், கு.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் இணைச் செயலாளர், தமிழ்நாடு தோல் உற்பத்தி தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் நெல்லிக்குப்பம் எஸ்.புகழேந்தி, மாண்புமிகு குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் தலைமைக் கழக இளம் பேச்சாளர் கா.இராஜராஜேஸ்வரி, 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் மற்றும் டி.ஆர்.கோபி, கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், ரமணி அதிமூலம், வீ.கார்த்திக், ச.ராஜேஷ், இ.மனோகரன், இரா.விஜயகுமார், கோ. தேனுபுரி, இரா.செல்வகுமார் கி.முத்துமாறன், வே.சிவசுப்பிரமணி, எஸ்.கார்த்திக், மு.தினேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் சசிகலா கார்த்திக், ஆர்.தாமோதரன், லிங்கேஸ்வரி பாபு, செ.சுரேஷ் மற்றும் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தாம்பரம் மேற்கு பகுதி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழகத் நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர் இறுதியில் மாநகர பிரதி நிதி எம்.கலைவாணன் நன்றியுரையாற்றினார்..

# வேலூர் ஆட்சியரகத்தில் கொடி நாள் தினத்தை முன்னிட்டு நலதிட்ட விழா




வேலூர் டிச.9

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக காயிதே மில்லத் கூட்டரங்கில், கொடி நாள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற தேநீர் விருந்து நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களின் குடும்பதினர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப் கர்னல் ஆர்.பி. வேலு (ஓய்வு), முன்னாள் படைவீரர் நல அமைப்பாளர் சடையன், கண்காணிப்பாளர் அமரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# டிச 6 பாபர் மஸ்ஜித் இடிப்பு நாள், வேலூரில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம்!!




வேலூர் டிச.9

வேலூர் மாவட்டம், வேலூர், அண்ணா சாலை, அண்ணா கலையரங்கம் அருகில், டிச 6 பாபரி மஸ்ஜித் இடிப்பு நாள், வேலூரில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் இஸ்லாமியர் வழிபாட்டுத்தளங்கள் மற்றும் வஃக்பு சொத்துக்கள் பாதுகாப்பு குறித்து மாபெரும் மக்கள் திரல் ஆர்ப்பாட்டம், மனிதநேய மக்கள் கட்சி, தலைமை நிலைய செயலாளரும், வழக்கறிஞருமான எம்.ஜைனுல் ஆபிதீன் தலைமையிலும், வேலூர் மஸ்ஜித் அசோசியேஷன் வேலூர் மாவட்ட தலைவர் ஆலிஜனாப் வி.கே.அப்துல் அலீம் சாஹெப் முன்னிலையிலும் இம்மாபெரும் ஆர்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் அர்ஷத் அஹமத் வரவேற்புரையில், கண்டனப் பேருரை மேற்கு மாவட்ட செயலாளர் ஆலியார் சுல்தான் அஹமத், உலாமா அணி மாநில பொருளாளர், பேராசிரியர் சேலம் முஹம்மத் பர்கத் அலி, திருப்பத்தூர் மாவட்ட தலைவர் நஜீர் அகமத், மாநில செயற்குழு உறுப்பினர் அப்துல்ஹமீத், தலைமை பிரதிநிதி ஷாஜகான், மாவட்டத் தலைவர் ராணிப்பேட்டை முகமதுஅலி, மாநில செயலாளர் ஏஜாஸ் அஹமத், மாநில செயற்குழு உறுப்பினர் ஆசாத், வடக்கு மாவட்ட தலைவர் திருவண்ணாமலை ஜமால், தலைமை நிலைய செயலாளர் ஜைனுல் ஆபிதீன், தெற்கு மாவட்ட செயலாளர் திருவண்ணாமலை கலிமுல்லா, வே.கி.மா. சித்திக், குடியாத்தம் அகமது ஷெரிப், வேலூர் கொணவட்டம் ஹோட்டல் மஸ்தான் பக்ருதின், ஊடக பிரிவு இர்பான், ஜானி முஜிப்ரகுமான், விடுதலை சிறுத்தைகளின் கட்சி வேலூர் மாநகர மாவட்ட செயலாளர் பிலிப், துணை பொதுச் செயலாளர் ரஜினிகாந்த் ஆகியோர் கண்டன உரையாற்றி சிறப்பித்தனர். வேலூர் வி.சி.க. மாவட்ட துணைச் செயலாளர் இளங்கோ, மாவட்ட து. செயலாளர் கோட்டி (எ) கோவேந்தன், இளையராஜா, விசிக இளம்புயல் பூஞ்சோலை கர்ணா, விமல்குமார், நாகு உட்பட பலர் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர்.

இப்பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் தமுமுக வேலூர் திருவண்ணாமலை இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த அனைத்து நிர்வாக பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள், இஸ்லாமிய பெண்கள், இளைஞர்கள் முதியவர்கள் மற்றும் குழந்தைகள் என அனைத்து தரப்பு இஸ்லாமியர்கள் 2000த்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டு பதாகைகளை கையிலேந்தி, கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் மனிதநேய மக்கள் யூ.இம்ரான் பைஸ் நன்றியுரையாற்றி ஆர்பாட்டம் நிறைவுபெற்றது.

# வேலூர் மாவட்ட தலைமை விளையாட்டு மைதானத்தில் நடந்த விழாவில் நலதிட்ட உதவிகளை வழங்கிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்



வேலூர் டிச.9

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, மாவட்ட விளையாட்டு மைதானத்தில், வேலூர் மாவட்டத்தில் ரூ. 75.95 கோடி மதிப்பிலான 17 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி,

ரூ.14.28 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 36 திட்ட பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, 247 ஊராட்சிகளுக்கு 345 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்புகளை தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி அனைத்து விளையாட்டு வீரர்களையும் பாராட்டி ஊக்குவித்து வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 4,844 பயனாளிகளுக்கு ரூ. 128.92 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், அமுலு, ஈஸ்வரப்பன், வில்வநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, மா.ஊ.கு.த.பாபு, துணை மேயர் சுனில்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி மற்றும் அரசு அலுவலர்கள், பயனாளிகள், மக்கள் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




செங்கல்பட்டு மாவட்டம் பம்மல் தெற்கு பகுதி சார்பில் மறைந்த டாக்டர் அம்பேத்காரின் அவர்களின் 68வது நினைவு தினத்தை முன்னிட்டு பம்மல் கிருஷ்ணா நகர் அருகே மேற்கு மாவட்ட தலைவர் மின்னல் குமார் மற்றும் மாவட்ட செயலாளர் அறிவானந்தம் தலைமையில் மறைந்த டாக்டர் அம்பேத்கரின் திருவிழா படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர். இதனை தொடர்ந்து 200க்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் டி.எஸ்.குமார், கே.ஜெகதீசன், டி.தேவி, ஆர்கே.அருண், ஜாவித் அகமது உட்பட தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# கொடைக்கானல் தனியார் விடுதியில் மதுரையை சேர்ந்த பெண் விஷமருந்தி தற்கொலை! கள்ள காதலன் தப்பியோட்டம்





கொடைக்கானல், டிச.9

மதுரை மாவட்டம் அழகர் கோவில் செல்லும் சாலையில் உள்ள மேல் கள்ளந்திரி அருகே வசிப்பவர் பாலுச்சாமி, இவரது மனைவியான மகாலெட்சுமி(28) என்பவருடன் வசித்து வந்துள்ளார், இவர்களுக்கு திருமணம் முடிந்து 5 வருடங்களாக குழந்தை இல்லை என தெரிவிக்கப் படுகிறது.

இதனையடுத்து மகாலெட்சுமி வசிக்கும் தெருவில், வசித்து வரும் சசிக்குமார் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் அது கள்ளகாதலாக மாறியதாக கூறப்படுகிறது, மேலும் சசிகுமாருக்கு திருமணம் முடிந்து குழந்தைகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மகாலெட்சுமி தனது கணவருக்கு மோதிரம் வாங்கி தருவதாக கூறி வீட்டில் இருந்து சுமார் 30,000 பணத்தை எடுத்து செல்வதாக நேற்று வீட்டை விட்டு வெளியே வந்துள்ளார், இதனையடுத்து கள்ள காதலனுடன் இருசக்கர வாகனத்தில் கொடைக்கானல் வருகை புரிந்து, எம்.எம்.தெரு பகுதியில் உள்ள தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து நேற்று மாலை 5 மணிக்கு இருவரும் தங்கியுள்ளனர்.

நேற்று இரவு இருவரும் சேர்ந்து உணவு அருந்தியதாகவும் கூறப்படும் நிலையில் இன்று காலை அறையில் இருந்து துர்நாற்றம் எழுந்துள்ளது, கதவை தட்டிப்பார்த்தும் பெல் அழுத்தியும் தங்கும் அறையின் கதவு நீண்ட நேரம் திறக்காததால் விடுதி பணியாளர்கள் கொடைக்கானல் காவல் துறையினருக்கு தகவல் அளித்து உள்ளனர், காவல் துறையினர் விரைந்து சென்று தங்கும் விடுதியில் விசாரணை மேற்கொண்டனர்.

இதில் உடன் வந்த சசிக்குமார் இருசக்கர வாகனத்தை விட்டு விட்டு தப்பி சென்றதும், மகாலெட்சுமி உணவில் குருணை மருந்து கலந்து சாப்பிட்டதும் தெரியவந்துள்ளது, மேலும் மகாலெட்சுமி நேற்று தனது தம்பியிடம் தனக்கு வாழப்பிடிக்கவில்லை என்றும் தான் தற்கொல செய்து கொள்ளப் போவதாகவும், செல் போனில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கொடைக்கானல் காவல் துறையினர் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு கொடைக்கானல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர், குழந்தை இல்லாத காரணத்தினாலும், கள்ளகாதலுடன் வந்த காரணத்திற்காகவும் பெண் உயிரிழந்த சம்பவம் இப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மகாலெட்சுமி தனது தம்பியிடம் தகவல் தெரிவித்த பிறகு மதுரையில் காவல் நிலையத்தில் அவரது தம்பி புகார் அளித்து, அவரது போன் சிக்னல் உள்ள இடம் கொடைக்கானல் என்று வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது,

மேலும் இந்த தங்கும் விடுதியில் முறையாக அடையாள அட்டை மற்றும் முறையான விலாசம் வாங்காமலும், தங்கும் அறையும் வழங்கப்பட்டுள்ளது, மேலும் முறையாக பாராமரிப்பின்றி சிசிடிவி கேமரா இயங்காமல் இருந்ததன் காரணமாக தங்கும் விடுதிக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் காவல் துறை சார்பில் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கொடைக்கானல் மலைப் பகுதியில் உள்ள தனியார் விடுதிகளில் முறையாக அனுமதி பெறாமல் தங்கும் விடுதிகள் நடைபெற்று வருகின்றன, மேலும் அடையாள அட்டை, விலாசம் வாங்காமல் தங்கும் அறையும் தருவதும் வாடிக்கையாக உள்ளது, அதே போல இந்த விடுதியில் கண்காணிப்பு கேமராவும் முறையாக இல்லாமல் இதற்கு காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் எழுந்துள்ளது.

# உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு தென்காசியில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்



தென்காசி, டிச.9

தென்காசியில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளை முன்னிட்டு தென்காசிதெற்கு மாவட்ட திமுக தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன் ஏற்பாட்டில் தென்காசி ஊராட்சி பகுதிகளில் பணியாற்றி வரும் சுமார் 200க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தென்காசி தெற்கு மாவட்ட திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஜெயபாலன் தலைமையேற்று நலத்திட்ட உதவிகளை தூய்மை பணியாளர்களுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் மாவட்ட கவுன்சிலர் கனிமொழி, கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், திவான் ஒலி, தென்காசி யூனியன் சேர்மன் ஷேக் அப்துல்லா, தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், பேரூர் செயலாளர்கள் குற்றாலம் குட்டி என்ற சங்கர், இலஞ்சி முத்தையா, பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை, தொண்டரணி துணை அமைப்பாளர்கள் குற்றாலம் சுரேஷ், சைலப்பன், சிவராஜ் பாண்டியன், ஒன்றிய கவுன்சிலர்கள் மல்லிகா, கலாநிதி, பொன் சீலன், மாணவரணி அமைப்பாளர் ஜே கே ரமேஷ், அயலக அணி ராமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கோவையில் நாம்தமிழர் கட்சியின் மாணவர்பாசறை நடத்திய "வையத் தலைமை கொள் "விருது வழங்கும் விழாவில் சிவகங்கை மாவட்டத்தைச்சேர்ந்த அழகப்பா பல்கலைக்கழக கல்வியியல் கல்லூரி மாணவர் கி.லெனின் குமார் சமூகசேவை துறையில் தேர்ந்தெடுத்து,விருதாளர் கி.லெனின் குமார் " இளஞ் சமூகச்சுடர் விருதினை" பெற்றார் .நாம்தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழர் சீமான் வழங்கி வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்ந்தார்.

# பிரம்ம குமாரிகள் தியான மையம் நடத்திய டிஜிட்டல் நல்வாழ்வு கருத்தரங்கு



மதுரை, டிச.9

மதுரை அண்ணா நகரில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் ராஜ யோக தியான மையத்தின் சார்பில் "டிஜிட்டல் நல்வாழ்வு" என்ற கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கை துவக்கி வைத்த வக்பு வாரியக் கல்லூரி முன்னாள் முதல்வர் டாக்டர் அப்துல் காதிர் பேசுகையில் ஒவ்வொரு தொழில்நுட்பமும் நன்மை, தீமை என்ற இரண்டு பக்கங்களை கொண்டது என்றும், அவற்றில் நன்மையை தேர்ந்தெடுத்து பாதுகாப்பான முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், மொபைல் போன் தொழில்நுட்பம், பண பரிமாற்றம் செய்யவும், உலகில் எந்த மூலையில் இருப்பவரையும் உடனடியாக தொடர்பு கொள்ளவும், சமூக ஊடகங்கள் மூலம் நண்பர்கள், குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கவும், வீடியோ கால் மூலம் முகத்தை பார்த்து பேசவும், ஆன்லைன் மூலம் பல்வேறு படிப்புகள், பயிற்சிகளை பெறவும், புத்தகங்கள், செய்தித்தாள்களை வாசிக்கவும் பயன்படுத்த முடிகிறது போன்ற நன்மைகள் இருந்தாலும் தொடர்ந்து மொபைல் ஃபோனை பயன்படுத்துவதால் பல உடல் நலப் பிரச்சினைகளுக்கு காரணமாகவும் கண்கள், மூளை, முதுகு மற்றும் தூக்கம் ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுவதற்கும், சமூக உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தவும், தவறான தகவல்களை பரப்புவதால் சமூகத்தில் குழப்பங்கள் ஏற்படவும், சைபர் குற்றங்கள் பெருகவும் காரணமாக அமைகின்றது. எனவே ஒவ்வொரு தொழில்நுட்பத்திலும் உள்ள நன்மைகளை எடுத்துக் கொண்டு நமது வாழ்க்கை முறையில் எவ்வித சிக்கலும் ஏற்படாதவாறு பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

இதன்பின் பேசிய இம்மையத்தின் பொறுப்பாளர் பிரம்மகுமாரி ராணி "டிஜிட்டல் நலவாழ்வு" பற்றிய விரிவான விளக்கத்தினை கம்ப்யூட்டர் பவர் பாயிண்ட் மூலம் விளக்கினார். இக்கருத்தரங்கில் ஒய்வு பெற்ற பேராசிரியர் முனைவர். கரு. முருகேசன் உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பிரம்ம குமாரி ராணி தலைமையில் பிரம்ம குமாரிகள் கீதா, லட்சுமி, சகோதரர்கள் முரளி, ஹரிஹரன் ஆகியோர் செய்தனர்.



தமிழக துணை முதல்வர் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி தலைமையில் போடி கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் எஸ் பிஅய்யப்பன் முன்னிலையில் வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் கண்ணன் முன்னிலையில் பூதிப்புரம் பேரூர் திமுக செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் பா. கவியரசு பால்பாண்டியன் சொந்த நிதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூதிப்புரத்தில் உள்ள அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் நண்பகல் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் மாவட்ட நகங ஒன்றிய பேரூர் மற்றும் ஊரக திமுக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தூய்மை பணியாளர்கள் கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் பேரூராட்சி செயல் அலுவலர் வெ கணேசன் நன்றி கூறினார்.

# புனித அந்தோணியாரின் ஆண்டு திருவிழா முன்னிட்டு அந்தோனியாருக்கு மாலையிட்ட ஏராளமான பக்தர்கள் சிறப்பு பூஜை

உத்தமபாளையம், டிச.9



புனித அந்தோணியாரின் ஆண்டு திருவிழா முன்னிட்டு அந்தோனியாருக்கு மாலையிட்ட ஏராளமான பக்தர்கள் சிறப்பு பூஜை மற்றும் ஆராதனை நடைபெற்று 48 நாட்கள் விரதத்தை பக்தர்கள் தொடங்கினர்.

தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே அனுமந்தன் பட்டி தூய ஆவியானவர் பேராலயத்தில் அந்தோனியாரின் ஆண்டு திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் அந்தோணியாருக்கு மாலையிட்டு இன்று முதல் தங்களது விரதத்தை தொடங்கினர்.

முன்னதாக அனுமந்தன்பட்டி தூய ஆவியானவர் திருத்தளத்தில் சிறப்பு பூஜைகள் ஆராதனைகள் மற்றும் வழிபாடு நடைபெற்றது தொடர்ந்து திவ்ய நற்கருணையும் அனுசரிக்கப்பட்டது.

வருகின்ற ஜனவரி 16 17 ஆம் தேதி திண்டுக்கல் மாரம்பாடியில் உள்ள புனித அந்தோனியார் திருத்தளத்தின் ஆண்டு திருவிழா கொண்டாடப்பட்டு வருவதை முன்னிட்டு உத்தமபாளையம் அருகே அனுமந்தன்பட்டி தூய ஆவியானவர் திருத்தளத்தில் ஏராளமான கிறிஸ்தவ பொதுமக்கள் மாலை அணிவித்து அந்தோணியாருக்கு 48 நாட்கள் விரதம் தொடங்கினர்.

பங்குத்தந்தையர் பிரான்சி சேவியர் மாலை அணிவித்து தீர்த்தம் தெளித்து ஜெபமாலை செய்து மாலை அணிவித்தார்.

சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து மாலையிட்டு அந்தோனியாருக்கு விரோதத்தை தொடங்கி வருகின்ற 16,17 தேதி கால்நடையாக நடந்து அந்தோணியார் திருத்தலத்தை அடைந்து மாலையினை கழட்டி சிறப்பு பூஜையில் கலந்து கொள்வர்.

# வரும் சட்டசபை தேர்தலிலும் அதிமுகவினுடன் கூட்டணி தொடரும்

## வத்தலகுண்டு கொடியேற்று விழாவில் எஸ் பி டி ஐ மாநில தலைவர் பேட்டி

வத்தலகுண்டு டிச.9

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டுவில் எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் கொடியேற்று விழா

மாநில தலைவர் நெல்லை முகமது முபாரக் தலைமையில் நடைபெற்றது. எஸ்.டி.பி.ஐ. கட்சியின் நகரத்தலைவர், சேக் அப்துல்லா, எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தொகுதித்தலைவர் மற்றும், தொகுதி செயலாளர் அன்வர்தீன், முன்னிலை வகித்தனர். எஸ்.டி.பி.ஐ. கட்சியின் நிர்வாகிகள் அரசு மைதீன்,அகமது பிலால், கவுன்சிலர் நாகூர் ஹனிபா, செயலாளர் சேக் முகமது, பொருளாளர் சையது சுல்தான் மற்றும், நகர் நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் நூர்முகமது, திப்பு சுல்தான், கணவாய்பீர் கலந்து கொண்டு வத்தலக்குண்டு தபால் நிலையம் முன்பாக கொடியேற்றி கோஷமிட்டனர். பின்பு செய்தியாளர்களிடம் பேசிய எஸ்டிபிஐ கட்சியின் மாநில தலைவர் முகமது முபாரக் பேசும் போது



நமது முல்லைப் பெரியார் அணையில், வருடம் தோறும் நடைபெறுகிற மாறாமத்து பணிகளை, தமிழக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு தமிழக அரசு மேற்கொள்ள வேண்டிய, அந்த மராமத்து பணிகள் நடைபெறக்கூடாது என்பதாக, கேரள அரசு அதனை தடுத்திருப்பதாக சொல்லி செய்திகள் வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில், தமிழகத்திற்கான உரிமையை தமிழகம் நிலைநாட்டிட வேண்டும். பராமரிப்பது என்பது அது அணையை பாதுகாப்பதற்கான ஒரு வாய்ப்பினை தரும், எனவே அந்த வகையில் தமிழ்நாட்டினுடைய அந்த உரிமை அடிப்படையில், அங்கே தொடர்ந்து மராமத்து பணிகளை செய்வதற்கான சட்டபூர்வமான நடவடிக்கைகளை, தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். அதற்கு தேவையான அனைத்து பூர்வாங்க பணிகளையும் உடனடியாக மேற்கொண்டிட வேண்டும் என்று, நாங்கள் தமிழக அரசை வலியுறுத்துகின்றோம்.

எஸ்டிபிஜ கட்சியை பொறுத்தவரை, நாங்கள் வரவேற்கிற 2026 சட்டமன்ற தேர்தலில், கட்சியின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள், இந்த சட்டமன்றத்தில் நுழைவதற்கான தேவையான அத்தனை நடவடிக்கையும், நாங்கள் எடுத்து வருகிறோம். குறிப்பாக எங்களது கட்சியினுடைய கட்டமைப்பு பலப்படுத்துவது, தமிழகம் முழுவதும் குறிப்பிட்ட தொகுதிகளை தேர்ந்தெடுத்து தேர்தல் பணிகளை நாங்கள் துவக்கி இருக்கிறோம். அந்த அடிப்படையில் வரவிருக்கிற 2026 சட்டமன்ற தேர்தலில், அதிமுக கூட்டணியோடு எஸ்டிபி கட்சி தேர்தலை எதிர்கொள்ளும், நிச்சயமாக எங்களது அணி தமிழ்நாட்டிலே ஒரு மாற்றத்தை உருவாக்குகிற வகையில், ஒரு ஆட்சி மாற்றத்தை உருவாக்குகிற அணியாக எங்களது அணி இருக்கும்.

தமிழக அரசு தமிழ்நாட்டில் எந்த பேரிடர் வந்தாலும், அந்த பேரிடருக்கு வேண்டிய தேவையான உதவிகளை, மத்திய அரசு செய்யாமல், அது மாநில அரசை நோக்கி அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு என்று சொன்னால் அவர்களுக்கு வேப்பங்காயாக கசக்கிற சூழலை, ஒவ்வொரு பேரிடர் காலத்திலும் நாம் சந்தித்து வருகிறோம். ஒன்றிய அரசினுடைய இந்த நடவடிக்கை என்பது, ஒரு கண்ணுக்கு மையும் ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பு வைக்கிற நடவடிக்கை, தமிழக அரசை பொருத்தவரை, எந்த பேரிடராக இருந்தாலும் சரி, அல்லது பருவமழை காலங்களாக இருந்தாலும் சரி, தமிழ்நாட்டுடைய அந்த பாதிப்புகளை குறைக்கிற வகையிலான, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதில், தமிழ்நாடு அரசு தோல்வியும் முக்கியமாக இருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய மூன்றாண்டு கால திமுக அரசின் தோல்வி யைத்தான் இந்த செயல்பாடுகள் காட்டுகிறது. எனவே எதிர்கட்சிகளாக இருந்தாலும், எதிர்கட்சி தலைவராக இருந்தாலும், அவர்கள் மக்களுடைய பிரச்சினை சுட்டிக்காட்டும் பொழுது, அதனை செவியேற்கின்ற அரசாக திமுக அரசு இல்லை. எனவே இதற்கெல்லாம் வரவிருக்கும் 2026 சரியான தக்க பாடத்தை, தமிழக மக்கள் கற்பிப்பார்கள்.

திண்டுக்கல் மாவட்டத்தினுடைய மிக முக்கியமான ஒரு பகுதியாக நகரமாக வத்தலகுண்டு நகரம் விளங்கி வருகிறது. இங்கே ஒரு அடிப்படை வசதிக்காக, மருத்துவமனையை அதனுடைய தரத்தை உயர்த்தி இங்கேயே உயர்தர சிகிச்சைகள் எல்லாம், வழங்குகிற விதத்திலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று, எஸ்டிபி கட்சி உட்பட இங்கே இருக்கிற ஜனநாயக சக்திகள், பல்வேறு போராட்டங்கள் நடத்தி விட்டார்கள். இன்று வரை அரசு அதற்காக செவியேற்கவில்லை எனவே, இதனை ஒரு போர்க்கால கடமையாக அடிப்படையாக கருதி வத்தலகுண்டு மருத்துவமனையை தரம் உயர்த்தி இங்கேயே உயிர் காக்குகிற சிகிச்சைகள் எல்லாம் வழங்கும் வகையில், அந்த மருத்துவமனையை தரம் உயர்த்திட வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் தமிழக அரசுக்கு முன் வைப்பதாக தெரிவித்தார்

# தீபத் திருவிழா: தி.மலையில் 156 பள்ளிகளுக்கு 8 நாட்கள் விடுமுறை



தி.மலை, டிச.9

திருவண் ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கடந்த ஒன்றாம் தேதி முதல் கார்த்திகை தீப திருவிழா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்வாக வரும் 10ம் தேதி மகா தேரோட்டமும், வரும் 13ம் தேதி பரணி தீபம் மற்றும் மகா தீபம் ஏற்றப்படவுள்ளன.

கார்த்திகை தீபத் திருவிழா பாதுகாப்பு பணியில் சுமார் 14 ஆயிரம் காவலர்கள் ஈடுபடவுள்ளனர். இவர்கள் தங்குவதற்காக திருவண்ணாமலை வட்டத்தில் உள்ள அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் தங்க வைக்கப்படவுள்ளனர். இதனால், 156 பள்ளிகளுக்கு வரும் டிச. 9ம் தேதி தேதி முதல் டிச.16ம் தேதி வரை 8 நாட்களுக்கு விடுமுறை அறிவித்து ஆட்சியர் தெ.பாஸ்கர பாண்டியன் உத்தரவிட்டுள்ளார்.

மாலை தந்தி





மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் செள. சங்கீதா முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரது சார்ந்தோர் நலன்காக்க திரட்டப்படும் நிதியான படைவீரர் கொடிநாள் 2024 உண்டியல் வசூலினை துவக்கி வைத்தார்.

# துணை முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு தேனியில் பழங்குடியினருக்கு உணவுப் பொருட்கள் வழங்கல்

தேனி, டிச.9

தேனி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் பகுதியில் பழங்குடியினர் மக்கள் 50 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது

தமிழ்நாடு முதல்வர் ஆணைக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் இ பி ராஜா வழிகாட்டுதலோடு தேனி திமுக தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் கிருஷ்ணன் எம்.எல்.ஏ., வழிகாட்டுதலோடு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராசன் தலைமையில் ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் பேரூர் செயலாளர் சரவணன் முன்னிலையில் ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் பகுதியில் உள்ள 50 பழங்குடியின குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது



## ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே ரூ.7 கோடி செலவில் புதிய பணிகளை தொடங்கி வைத்த அமைச்சர்



ஈரோடு டிச 7:

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே வெள்ளோடு கள்ளுகடைமேட்டில் வெள்ளோடு நகரில் நகர்ப்புற மேம்பாடு ஒருங்கிணைந்த சாலை மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ 7 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் விரிவு படுத்தப்பட்ட சாலைகள் புதிய ரவுண்டானா தடுப்பு சுவர் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைதமிழ்நாடு வீட்டு வசதிதுறை அமைச்சர் சு.முத்துசாமி பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஈரோடு நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் ரமேஷ் கண்ணா, உதவி பொறியாளர் மணிகண்டன், ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ, சென்னிமலை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் செங்கோட்டையன், ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு.சுப்ரமணியம், குமாரபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோ, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், ஈரோடு தெற்கு மாவட்ட திமுக தொண்டரணி அமைப்பாளர் சுள்ளான் ராஜேந்திரன், உள்ளிட்டமாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வத்தலக்குண்டு அருகே தடை விதிக்கப்பட்ட கால்வாய் பகுதியில் தோட்டாக்களை வெடித்து குழு ஆய்வு

வத்தலக்குண்டு டிச.9

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே விருவீடு ஊராட்சி மேல அச்சனம்பட்டி பகுதியில் வைகை அணையிலிருந்து விடுவீடு பகுதிக்கும், உசிலம்பட்டி பகுதிக்கும் விவசாயத்திற்கு தண்ணீர் செல்லும் 58 ஆம் கால்வாய் செல்கிறது. அதேபகுதியில் பூசாரிபட்டி சுந்தர் கரடு பகுதியில் குவாரி நடத்தி வந்தார். குவாரியில் கல்லுடைக்க வெடி வைக்கும் போது 58ம் சிமிண்ட் கால்வாய் அதிர்வு ஏற்பட்டு சேதமடைய வாய்ப்புள்ளதாக கால்வாய் பாசன விவசாயிகள் புகார் செய்தனர். அதைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் கல்குவாரி நடத்த தடை விதித்தார். அதைத் தொடர்ந்து சுந்தர் மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். மதுரை ஐகோர்ட் தடை செய்யப்பட்ட குவாரி பகுதியை மண்ணியல் பேராசிரியர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் வைத்துஆய்வு செய்து அறிக்கை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டது.



அதைத்தொடர்ந்து அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் குமார் தலைமையில்8 பேர் கொண்ட குழுவினர்விருவீடு சென்று குவாரி பகுதியில் ஆய்வு செய்து நான்கு இடங்களில் குறைந்தது 14 முதல் 30 குழிகள் அமைத்து தோட்டாக்களை நிரப்பி வெடித்து சோதனை நடத்தினர் தோட்டாக்கள் வெடிக்கும் போது ஏற்படும் அதிர்வுகளை அதற்கான கருவிகள் கொண்டு பதிவு செய்தனர் சோதனை முடிந்த பின் அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்

## பாபர் மசூதி இடிப்பு மற்றும் நீதிமன்ற தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி இந்திய தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பெரியகுளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

பெரியகுளம், டிச.9

தேனி மாவட்டம் பெரியகுளம் புதிய பேருந்து நிலைய பிரிவு கேஎஸ்கே கேண்டீன் எதிரில் இந்திய தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் பாபர் பள்ளிவாசல் இடிப்பை கண்டித்தும், நீதிமன்ற தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தியும், பாபர் மஜீத் நிலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் ,வழிபாட்டு தலங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .




இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தேனி மாவட்ட செயலாளர் முபாரக் அலி தலைமை தாங்கினார் .மாநிலச் செயலாளர் யாசர் அராபாத், விடுதலை சிறுத்தைகள் கட்சி தேனி திண்டுக்கல் மண்டல செயலாளர் இரா. தமிழ்வாணன் ,அகில இந்திய பார்வர்ட் பிளாக் தேனி மாவட்ட பொதுச் செயலாளர் எஸ்.ஆர். சக்கரவர்த்தி ,இந்திய தவ்ஹீத் ஜமாஅத் தேனி மாவட்ட தலைவர் ராஜா முகமது ,திராவிடர் கழகம் பெரியகுளம் நகர பொறுப்பாளர் அன்புக்கரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி செயலாளர் ஆலிம் எம்.அகமது முஸ்தபா , விசிக நகர செயலாளர் ஜோதி முருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள் கலந்து ஏராளமானோர் கொண்டனர்.

## தென்காசியில் தமுமுக சார்பில் வக்பு திருத்த மசோதவை திரும்ப பெற கோரி ஆர்ப்பாட்டம்



தென்காசி, டிச.9

தென்காசியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் வக்ப் திருத்த மசோதாவை முழுமையாக திரும்ப பெற கோரியும், வழிபாட்டுதலங்கள் பாதுகாப்புச் சட்டம் 1991 முழுமையாக கடைப்பிடிக்க கோரியும், உ.பி. மாநிலம் சம்பலில் உள்ள ஷாஹி பள்ளிவாசலில் ஆய்வில் காவல் துப்பாக்கி சூட்டில் ஐவர் கொல்லப்பட்டதை கண்டித்தும் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட தமுமுக செயலாளர் அப்துல் ரஹ்மான், மமக மாவட்ட செயலாளர் சலீம், தமுமுக மாவட்ட பொருளாளர் முகமது பாசித் தென்காசி மாவட்ட தமுமுக செயலாளர் அப்துல் ரஹ்மான், மமக மாவட்ட செயலாளர் சலீம், தமுமுக மாவட்ட பொருளாளர் முகமது பாசித் மற்றும் கன்னியாகுமரி தூத்துக்குடி திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் உள்ள இஸ்லாமியர்கள் மற்றும் நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட தமுமுகவை சார்ந்த ஒன்றிய நகர பேரூர் கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள். பெண்களும் ஜமாத்தார்களும் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியாக தென்காசி மாவட்ட தலைவர் எம் முகம்மது யாகூப் நன்றி கூறினார்.

## தேனியில் அம்பேத்கரின் 69 வது அம்பேத்கார் நினைவு நாளில் நலத்திட்டங்களை வழங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி

தேனி, டிச. 8

தேனியில் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரின் 69 வது நினைவுதினமான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு முதல்வர் காணொளி காட்சி வழியாக தமிழக அரசு தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி . அதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பல்வேறு துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவை சார்ந்த 300 பயனாளிகளுக்கு 18 துறைகள் மூலம் சுமார் ரூ.2.40 கோடி மதிப்பிட்டான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் ஷஜீவனா தலைமையில் தேனி பாராளுமன்ற தங்க தமிழ்ச்செல்வன்,பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவண குமார்,ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் முன்னிலை வசித்தனர்.




இதில் சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் கலந்து கொண்டு பயனளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளுக்கு கைபேசி,மிதிவண்டி, தையல் மிஷின், வீட்டின் ஆணை பத்திரம், ஆகியவற்றை வழங்கினார். இந்த விழாவில் மாவட்ட நகர ஒன்றிய பொறுப்பில் உள்ள கட்சி பொறுப்பாளர்களும் அதிகாரி களும் கலந்து கொண்டனர். அதுபோல் நலத்திட்ட வழங்கும் இந்த விழாவில் பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் நவரசம் கலை - அறிவியல் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்

ஈரோடு டிச.9

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் பகுதியில் உள்ள நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறையின் சார்பாக AICTE TRAINING AND LEARNING (ATAL) நிதி உதவியுடன் ஆறு நாட்கள் (03.12.2024 09.12.2024) இணையவழி ஆசிரியர் திறன் மேம்பாடு பயிலரங்கம் நடைபெற்றது. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.கலைச்செல்வி வரவேற்புரை வழங்கினார். செல்வி பிளஸ்ஸிமோல் கருப்பொருள் உரை வழங்கினார்.




கல்லூரியின் முதல்வர் முனைவர். இரா.கனிஎழில் தலைமையுரை வழங்கி சிறப்பித்தார். மேலும், கல்லூரியின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் கல்லூரி கமிட்டி உறுப்பினர் முனைவர். இரா.பரமேஸ்வரன், இணைப் பேராசிரியர், கொங்கு பொறியியல் கல்லூரி பெருந்துறை, அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற துணைமுதல்வர் வி.சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார்.

கடந்த பத்து ஆண்டுகளாக நானோ டெக்னாலஜி பெரிய மாற்றத்தை அனைத்து துறைகளிலும் ஏற்படுத்தியுள்ளது. அதனைத் தொடர்ந்து மருத்துவத்துறையில் நானோவின் பங்களிப்பை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவே இக்கருந்தரங்கம் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய துறைகளை விட மருத்துவத் துறையில் அளப்பரிய சாதனைகளையும், ஆராய்ச்சிகளையும் நானோ பெற்று உள்ளது. அதன் தொடர்ச்சியே இக்கருத்தரங்கம் பல்வேறு மருத்துவ துறையில் நேனோ பங்களிப்பு, பயிற்சி மற்றும் இதர பயன்களை எடுத்துரைக்கிறது.

இக்கருத்தரங்கில் Dr. Smagul Karazhanov, Norway, Dr. N. Senthil Kumar, Oman, Dr. Sadhasivam Thangarasu, Korea, Dr. N. J. Suthan Kissinger, Jubail போன்று நாடுகளில் இருந்து பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்ற பதின்முன்று சிறப்பு வல்லுநர்கள் சிறந்ததொரு ஆய்வு சார்ந்த கருத்துக்களை வழங்கியுள்ளார்.

மேலும் Dr. G. Madhushankar, Sri Ramakrishna Hospital, Dr N. Senthilkumar, Royal Care Hospital, Dr. R. Sureshkumar, Adyar Hospital

Chennai, Dr. E. K. Sagadevan, Lotus Hospital Erode, Dr. Kausalya Nallasivam, Jai Maruti Hospital Erode போன்ற மருத்துவ வல்லுநர்கள் சிறந்ததொரு ஆய்வு சார்ந்த கருத்துக்களை வழங்கிட உள்ளனர்.

இக்கருத்தரங்கில் அனைத்து துறை சார்ந்த பேராசிரியர் மற்றும் ஆய்வு மாணவ மாணவிகளும் பங்கேற்பதற்கான https://atalacademy.aicte-india.org/ இணைப்பில் இணைய வழியில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

## உலகப்புகழ் பாலமேடு ஜல்லிக்கட்டு பணிகள் சிறப்பு பூஜையுடன் தொடக்கம்

அலங்காநல்லூர், டிச.9



உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு விழா வருகின்ற ஜனவரி மாதம் 15ஆம் தேதி வெகு விமர்சையாக நடைபெற உள்ளது. இதையொட்டி ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடு களை தொடங்குவதற்கு முன்பாக பாலமேடு கிராம பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகள் பிரசித்தி பெற்ற வலையபட்டி, ஸ்ரீமஞ்சமலை சுவாமி திருக்கோவிலில் ஜல்லிக்கட்டு விழா அழைப் பிதழை வைத்து சிறப்பு பூஜை செய்தனர்.

அதனைத் தொடர்ந்து பாலமேட்டில் உள்ள மஞ்சமலை ஆற்றுதிடல் வாடிவாசலில் சிறப்பு பூஜை செய்தனர். இந்த நிகழ்வில் மடத்து கமிட்டி தலைவர் மச்சவேல், செயலாளர் பிரபு, பொருளாளர் கார்த்திக் மற்றும் மடத்து கமிட்டி உறுப்பி னர்கள் கலந்து கொண்டனர். முதற்கட்டமாக ஜல்லிக்கட்டு விழா அழைப்பிதழ் வழங்கும் பணிகள் தொடங்கப்பட்டது. அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், ஊர் பெரியோர்கள் என அனைவருக்கும் அழைப்பிதழ் வழங்க உள்ளனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161